**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் - 2018**

---

**1.1 அபிப்பிராயம்**

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்றதன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவகத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்குகள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| (அ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறான ரூபா 285,765 மொத்த தொகையான கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது. | கருத்துரை தெரிவிக்கவில்லை. | கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஆராய்ச்சி செயற்திட்டங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 111,921 பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்துரை தெரிவிக்கவில்லை. | ஆராய்ச்சி செயற்திட்டங்களிலிருந்து கிடைக்க வேண்டிய பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறான ரூபா 377,483 மொத்த தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை தெரிவிக்கவில்லை. | கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிறுவனத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,301,132 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,732,399 ஆகும். இதற்கிணங்க, நிதி விளைவுகளில் ரூபா 431,267 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் மானியம் ரூபா 21,910,000 ஆல் அதிகரித்தமை நிதி விளைவுகளில் முன்னேற்றத்திற்கு பிரதானமாக காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| (அ) 2012-2015 காலப்பகுதியின் போது ரூபா 1,031,020 கிரயம் செலவு செய்து தோற்றுவிக்கப்பட்ட உயிரியல் வாயுப்பிரிவு 2016 ஆம் ஆண்டிலிருந்து செயற்படாது காணப்பட்டதுடன் அதனை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததன் காரணமாக பிரிவில் இருந்த இயந்திரங்கள் பயன்படுத்த முடியாத நிலைக்கு மாறியுள்ளது. | ஆனால் தற்போது காணப்படுகின்ற நிலைமையின் கீழ் அம் முறைமையினை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறே பல துணைக்கருவிகள் செயற்படும் நிலையில் இல்லாததனால் அவற்றை மீண்டும் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதன் மூலம் முறைமையானது உயிரியல் வாயுவினை உற்பத்தி செய்வதற்காக பராமரிப்பது பொருளாதாரரீதியாக இலாபம் தரக்கூடியது அல்ல என 2019 மார்ச் மாதம் 4 ஆந் நிதி குழுவின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | விசாரணைகளை மேற்கொண்டு உரிய திருத்தங்களைச் செய்வதனை தாமதித்த உத்தியோகத்தர்களை இனங்காண வேண்டும். |
| (ஆ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 6.2 மில்லியன் செலவு செய்து ஆரம்பிக்கப்பட்ட 09 ஆராய்ச்சி செயற்திட்டங்களும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 3.4 மில்லியன் செலவு செய்து ஆரம்பிக்கப்பட்ட 04 செயற்திட்டங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் இறுதியளவில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் முடிவுறுத்தப்பட்டிருக்காததனால் ஆராய்ச்சிகளுக்கு செலவு செய்யப்பட்ட பணத்திலிருந்து எதுவித நலன்களையும் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட 09 ஆராய்ச்சி செயற்திட்டங்களும் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 04 செயற்திட்டங்களும் இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டங்களின் ஒரு பகுதி தற்பொழுது முடிவுறுத்தப்பட்டள்ளதுடன் எஞ்சிய அறிக்கைகளுக்காக முடிவுறுத்த வேண்டிய கால எல்லை வழங்கப்பட்டுள்ளது. அச் செயற்திட்டங்கள் ஆராய்ச்சி முகாமைத்துவ கூட்டங்களின் போது மேற்பார்வை செய்யப்பட்டு வருவதுடன் தற்பொழுது செயல் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | புலமைப்பரிசில்களைப் பெற்று வெளிநாடு சென்ற 09 உத்தியோகத்தர்களிடமிருந்து மீண்டும் நாட்டிற்கு வருகைதராததன் காரணமாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவீடு செய்ய வேண்டியிருந்த பிணை முறிகளின் பெறுமதியான ரூபா 15,387,897 பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் மூலம் 1975 இலிருந்து 2003 வரை வழங்கப்பட்ட பட்டபின்படிப்பு படிப்புக்கள் சம்பந்தமான பிணைமுறிகளுக்குரிய புலமைப்பரிசில் கடன்பட்டோர்கள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளனர். எனினும் 2000 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறான கடன்பட்டோர்கள் நிறுவனத்திற்கு அறிவித்திருக்கவில்லை. | அறவீடு செய்யப்பட வேண்டிய பிணை முறிப் பணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| | உத்தியோகத்தர்களால் போலியான சான்றிதழ்களை சமர்ப்பித்து பதிவாளர் பதவியில் பதில் கடமை செய்திருந்தமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய குற்றமிழைத்த உத்தியோகத்தருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் மூலம் விசாரணை நடைபெற்று வருவதுடன் இந்த நிறுவனத்தின் மூலம் விசாரணைகள் நடாத்தப்படவில்லை. இது தொடர்பாக நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் போது வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் அடுத்து வரும் சில வாரங்களுக்குள் விசாரணையை நடாத்தி அதன் சிபார்சுகளை கட்டுப்பாட்டுச் சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய உத்தியோகத்தருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | புலமைப்பரிசில்களைப் பெற்று வெளிநாடு சென்ற 09 உத்தியோகத்தர்களிடமிருந்து மீண்டும் நாட்டிற்கு வருகைதராததன் காரணமாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவீடு செய்ய வேண்டியிருந்த பிணை முறிகளின் பெறுமதியான ரூபா 15,387,897 பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் மூலம் 1975 இலிருந்து 2003 வரை வழங்கப்பட்ட பட்டபின்படிப்பு படிப்புக்கள் சம்பந்தமான பிணைமுறிகளுக்குரிய புலமைப்பரிசில் கடன்பட்டோர்கள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளனர். எனினும் 2000 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறான கடன்பட்டோர்கள் நிறுவனத்திற்கு அறிவித்திருக்கவில்லை. | அறவீடு செய்யப்பட வேண்டிய பிணை முறிப் பணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 230,125 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்திற்கு கிடைத்துள்ள ஒரு கெசட் ரெக்கோடர், ஒரு கமரா தேக்கு மரத்திலான ஒரு சாப்பாட்டு மேசை, ஒரு நிறைவேற்றுனர் கதிரை என்பன 2018 மே 18 ஆந் திகதி கணக்காய்வினால் செய்யப்பட்ட பரிசோதனையின் போது நிறுவனத்தில் இருக்கவில்லை. | 2014 ஆம் ஆண்டின் போது பொருட்கள் கொள்வனவு இடம் பெற்றிருந்தும் அப் பொருட்கள் பிரதான களஞ்சியத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே இப்பொருட்கள் நிறுவனத்தில் காணப்பட்டிருந்தும் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு ஆவணங்கள் காணப்படவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பௌதீக உள்ளமை தொடர்பாக பரீட்சிப்பதற்கு கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 900,000 செலவு செய்து மகளிரை வலுப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குருனாகல், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் 20 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 2000 மகளிர் விவசாயத் தலைவர்களைப் பயிற்றுவிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 907,000 செலவு செய்து அனுராதபுரம் மாவட்டத்தில் 20 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் குருனாகல் மாவட்டத்தில் எந்த நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவியளித்தல் மற்றும் அனுராதபுர மாவட்டத்திலிருந்து விடுக்கப்பட்ட விசேட வேண்டுகோளின் அடிப்படையில் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாய சேவை நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் 20 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 1848 விவசாய மகளிர் தலைவர்களுக்கு மிகவும் வெற்றிகரமாக பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. கடந்த ஆண்டின் போதும் 10 நிகழ்ச்சித்திட்டங்கள் அந்த மாவட்டத்தில் நடாத்தப்பட்டன. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை திட்டமிடப்பட்டவாறு அமுல்ப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய PED 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 03 கூட்டங்கள் வீதம் நடாத்தப்பட்டன. | 2018 ஆம் ஆண்டில் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டிருந்தும் நான்காவது காலாண்டிற்கான கூட்டத்தை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினம், திட்டமிடப்பட்டவாறு திசெம்பர் மாதத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தை நடாத்துவதற்கு முடியாதிருந்தது. 2019 ஆம் ஆண்டில் உரிய முறைப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குணக்காய்வு குழு கூட்டத்தை நிர்ணயிக்கப்பட்டவாறு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |